▶4 இந்தியாவுக்கு சிக்கலை ஏற்படுத்தும் சாதி முறை பற்றி லீ குவான் இயூ

▶22 சிம்புவின் கண்ணெதிரே நயன்தாரா, ஆர்யா கொஞ்சி குலாவல்

▶6 தூத்துக்குடி அருகே பிடிபட்ட சீனாவின் போர்க் கப்பல்

தமிழ் முரசு

TAMIL MURASU

VOICE OF THE COMMUNITY

A SINGAPORE PRESS HOLDINGS PUBLICATION   MCI (P) 026/03/2013   http://www.tamilmurasu.com.sg   தோற்றம்: 1935   நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி   13 10 2013   ஞாயிறு   60 காசு

இந்திய ரூபாய்
நேற்றைய மதிப்பு
$2.08க்கு ₹100
$1 = ₹48.08

உள்ளே

காந்தி வேடத்தில் கின்னஸ் சாதனை

2,955 தமிழக மாணவர்கள் காந்தி வேடமணிந்து கின்னஸ் சாதனை.

பக்கம் ▶6

தீபாவளி சமையல்

தீபாவளிக்கு விதவிதமாகவும் ஆரோக்கியமாகவும் சமையல் செய்ய உதவும் பயனுள்ள குறிப்புகள்.

பக்கங்கள் ▶17,18,19

8 887332 505968

கடும் புயல் சீற்றம்: ஆந்திரா, ஒடிசா மக்கள் பரிதவிப்பு

ஆந்திரா, ஒடிசா மாநிலங்களில் கடும் சேதங்களை ஏற்படுத்தி நேற்றிரவு கரையைக் கடந்தது ஃபைலின் புயல். கடந்த 1999ஆம் ஆண்டு ஒடிசா மாநிலத்தைச் சீரழித்து சுமார் 10,000 பேரை பலிகொண்ட 'சூப்பர்' புயலைப் போன்ற நாசகாரப் புயல்தான் ஃபைலின். இவை இரண்டும் 5ம் புயல் இனம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஒடிசாவின் பரதிப் துறைமுகத்திலிருந்து 4 கடல் மைல் தூரத்தில் நேற்று 18 மீனவர்கள் சிக்கிக்கொண்டனர். பலத்த மழையும் ராட்சத சூறாவளியும் ஒன்று சேர்ந்து தாக்கியதில் நடுக்கடலில் தத்தளித்த அவர்களை மீட்கும் பணியில் ராணுவம் ஈடுபட்டது.

மேலும், ஒடிசாவின் கோபல்பூர் அருகே நிலச்சரிவு ஏற்பட்டது. புவனேஸ்வர் மற்றும ஜகதாசிங்பூர் மாவட்டங்களில் புயல் காற்றில் மரம் முறிந்து விழுந்ததில் 3 பேர் மாண்டனர்.

கடும் பாதிப்புகளைச் சமாளிக்க இரு மாநில மக்களும் கடந்த 2, 3 நாட்களாக படாதபாடு பட்டனர். ஆந்திராவின் வடக்குப் பகுதி மற்றும் ஒடிசாவின் தென் கடலோர மாவட்டங்களில் இந்து, முஸ்லிம், கிறித்துவர் என அனைவரும் ஒன்றிணைந்து புயல் சீற்ற ஆபத்தைத் தணிக்க வேண்டி கூட்டு சமய வழிபாடு நடத்தினர்.

அவசரத் தேவையாக மக்கள் உணவுப் பொருட்களை வாங்கி சேமித்தனர். நேற்றும் நேற்று முன்தினமும் ஒடிசாவின் தென் மாவட்ட மக்கள் உருளைக்கிழங்கு, தக்காளி ஆகியவற்றை ஏராளமாக வாங்கிச் சென்றனர்.

புயலால் மின்தடை ஏற்படும் என்றும் மின்சேவை மீண்டும் கிடைக்க ஒருசில நாட்கள் ஆகலாம் என்றும் செய்திகள் பரவியதால் ஏராளமான மெழுகுவர்த்திகளை அவர்கள் வாங்கிச் சென்றனர். புயலின் சீற்றத்தை உணர்ந்து அபாய எச்சரிக்கையை மத்திய அரசாங்கம் அறிவித்தது. இரு மாநிலங்களையும் சேர்ந்த சுமார் 700,000 மக்கள் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்குத் தேவையான உணவும் தண்ணீரும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசாங்க ஊழியர்களின் விடுமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

50 ஆண்டு சிங்கப்பூர் தமிழிலக்கிய மின்னிலக்கத் திட்டம்

வருங்கால தமிழரின் களஞ்சியம்

வில்சன் சைலஸ்

தமிழ் மின்மரபுடைமைத் திட்டத் தொடக்க நிகழ்வில் (இடமிருந்து) திட்டத் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு அருண் மகிழ்நன், தேசிய நூலக வாரியத்தின் தலைமை நிர்வாக அதிகாரி திருமதி இலெய்ன் இங், பிரதமர் அலுவலக அமைச்சர் திரு எஸ். ஈஸ்வரன், சிங்கப்பூர்த் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் திரு நா. ஆண்டியப்பன், 1966ஆம் ஆண்டு வெளியான 'சந்தனக் கிண்ணம்' நூலுடன் சிராங்கூன் தொடக்கக் கல்லூரி மாணவி ரமேஷ் தேஜஸ்வினி, ஆக அண்மைய 'லீ குவான் இயூ 90' என்னும் கவிதைத் தொகுப்பை ஏந்தி இருக்கும் செயின்ட் ஹில்டாஸ் தொடக்கப்பள்ளி மாணவர் ஆதித்யா ஸ்ரீனிவாசன். **படம்: தினேஷ் ஜொர்ட்**

இன்னும் 2 ஆண்டுகளில் சிங்கப்பூர் அதன் 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் தருணத்தில், சிங்கப்பூர் தமிழ் சமூகம் ஒரு வித்தியாசமான, பொருள் பொதிந்த அன்பளிப்பை நாட்டிற்கு வழங்கவிருக்கிறது. 50 ஆண்டு கால சிங்கப்பூர் தமிழிலக்கியத்தை மின்னிலக்கமாக்கும் தமிழ் மின்மரபுடைமைத் திட்டமே அந்த அன்பளிப்பு.

1965ம் ஆண்டில் சுதந்திரம் பெற்றதிலிருந்து 2015 வரை ஐம்பதாண்டு கால கட்டத்தில் சிங்கப்பூரில் உருவான, உருவாகும் தமிழிலக்கியம் அனைத்தையும் மின்னிலக்கமாக்கி, அதனை எதிர்காலச் சந்ததியினரும் பயன்படுத்திப் பலன் பெறும் வகையில் நாட்டுக்கு வழங்குவது திட்டம்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் நேற்று காலை திட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய பிரதமர் அலுவலக அமைச்சர் எஸ் ஈஸ்வரன், தமிழ் கலாசாரம், தமிழ் மேம்பாட்டுத் திட்டங்கள் ஆகியன இளம் தலைமுறையினரைச் சென்றடைய தகவல் தொழில்நுட்பம் ஒரு முக்கிய அம்சம் என்றார்.

"சிங்கப்பூரின் சவால்கள், சிங்கப்பூரர்களின் லட்சியங்கள், கவலைகள் ஆகியவற்றை கடந்த தலைமுறை எழுத்தாளர்கள் எவ்வாறு மக்களோடு பகிர்ந்து கொண்டார்கள் என்பது எதிர்காலத் தலைமுறைக்கு ஒரு பொக்கிஷமாக இருக்கும்," என்றார் திரு ஈஸ்வரன்.

தமிழ் மின்மரபுடைமைக் குழு வழி நடத்தும் இத்திட்டத்திற்கு தேசிய நூலக வாரியம், தேசிய மரபுடைமைக் கழகம், தேசிய கலை மன்றம், சிங்கப்பூர் புத்தக மேம்பாட்டு வாரியம் ஆகிய அமைப்புகள் ஆதரவு வழங்குகின்றன.

மின்னிலக்கத்திற்கான தொழில்நுட்ப செலவுகளை திட்டத்தின் முக்கிய ஆதரவாளரான தேசிய நூலக வாரியம் ஏற்றுக்கொள்ளும். இரண்டாண்டுகளில் திட்டம் முழுமை பெற்ற பிறகு, சிங்கப்பூர் தமிழ் இலக்கிய மின்தொகுப்பை வாரியமே நிர்வகிக்கும்.

"இழக்கப் போவதையும் இனி வரப் போவதையும் கட்டிக்காக்க உருவான திட்டம் இது. சிங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு இது ஒரு காமதேனு. மறைந்து போன, மறைந்துகொண்டிருக்கிற பல இலக்கியப் படைப்புகளுக்கும், படைப்பாளிகளுக்கும் புத்துயிர் அளிக்கும் வரப் பிரசாதம். வருங்காலச் சந்ததியினருக்கு அள்ளி அள்ளி வழங்கக்கூடிய ஓர் அட்சய பாத்திரம்," என்கிறார் திட்டத்திற்கு சிந்தனை வடிவம் கொடுத்தவரும், திட்டத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான திரு அருண் மகிழ்நன்.

"தேவையான புத்தகத்தை உடனே மின் வடிவில் தேடுவது ஆய்வாளர்களுக்குப் பெரிதும் கைகொடுக்கும். இத்துடன் கணினி வழியாக மின் நூல்களை வாசிக்கும் இளையர்களையும் இத்திட்டம் ஈர்க்கும்," என்றார் திரு அருண்.

மின்னிலக்கமாக்கும் முயற்சியில் பிழை திருத்துவதே மிகச் சிரமமான பணியாக இருக்கும் என்றும் கூறிய திரு அருண் மகிழ்நன், அந்தப் பணிக்கு உதவ முன்வருமாறு தமிழாசிரியர்களையும் தமிழ் எழுத்தாளர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் கேட்டுக்கொண்டார்.

இந்த பிரம்மாண்ட திட்டத்திற்குப் பங்காற்ற விரும்புவோர் mahizhnan@gmail.com என்னும் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.